கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), காஞ்சிபுரம் (பக்கம் )
எஸ்.சி. எண்:- **SC.No. 19/2013**
-----

**2024**-ம் ஆண்**டு செப்டம்பர் திங்கள் 19 –** ம் நாள் **வியாழன் கிழமை PW** என்பவரின் சாட்சியாகிய **திரு./திருமதி. சக்திவேல்** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் படி ) **Tr.Ravichandran, Gr.I B.C,**அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | **திரு. சக்திவேல்** |
| **S/o.** | - | **திரு. கண்ணியப்பன்** |
| வயது | - | **55** |
| தொழில் | - | **வழக்கறிஞர் உதவியாளர்** |

முதல் விசாரணை

நான் தற்போது காஞ்சிபுரம் அம்பேத்கா் நகரில் குடியிருக்கிறேன். தற்போது வழக்கறிஞா் உதவியாளராக பணிபுரிகிறேன். 7.8.2009 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் தனியார் ஆம்புலன்சு டிரைவராக பணியில் இருந்தேன் அம்புலென்சு எண்.டிஎண்.01ஆர்4115 என்ற வாகனத்தை ஓட்டி சென்றேன காஞ்சிபுரம் மருத்துவமனையிலிருந்து கிருஷ்ணன் என்பவரை சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றேன் அவருடன் அவா் அண்ணன் பெருமாள் அலமேலு குமாா் மற்றும் தேவராஜ் உடனிருந்தார். காஞ்சிபுரம் புது ரயில் நிலையம் அருகில் செல்லும்போது என்னை முந்தி சென்ற ஒரு குவாலிஸ் கார் வந்தது அதிலிருந்து 4,5 நபா்கள் வந்து எனது ஆம்புலென்சு கண்ணாடியை உடைத்தார்கள். என்னுடன் வந்த மாற்று ஓட்டுநா் அரி அம்புலென்சில் இருந்தார் அரி என்பவரை அடித்தார்கள். அங்கிருந்து நான் பெரிய காஞ்சிபுரம் காவல்நிலையத்திற்கு சென்றேன். சம்பவம் குறித்து நான் காஞ்சி தாலுகா காவல்நிலையத்தில் புகாா் கொடுத்தேன். அப்புகாா் அ.சா.ஆ.1 போலிசாா் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), காஞ்சிபுரம் (பக்கம் )
எஸ்.சி. எண்:- **SC.No. 19/2013**
**-----**

**2024-**ம் ஆண்**டு செப்டம்பர் திங்கள் 19 –** ம் நாள் **வியாழன் கிழமை PW** என்பவரின் சாட்சியாகிய **திரு./திருமதி. குமார்** நபரின் வாக்குமூலம் **(1876**ம் ஆண்டின் **10** விதியின் படி **) Tr.Ravichandran, Gr.I B.C,**அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | **திரு. குமார்** |
| **S/o.** | - | **திரு. ஆறுமுகம்** |
| வயது | - | **45** |
| தொழில் | - | **நெசவு தொழில்** |

முதல் விசாரணை

தற்போது நான் பூஞ்சை அரசந்தாங்கல் கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் குடியிருப்பில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். கடந்த 10,15 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நான் வேனில் என் மாமா கிருஷ்ணன் என்பவரை ஆம்புலென்சு வேனில் அழைத்து கொண்டு காஞ்சிபுரம ் மருத்துவமனையிலிருந்து சென்னையிலுள்ள மருத்துவமனைக்கு போனபோது காஞ்சிபுரம் ரயில் நிலையம் அருகே வண்டி நின்றது. அப்போது வண்டியை சுற்றி யாரோ சிலர் வந்து டமார் டமார் என்று அடித்தார்கள். நானும் என் சித்தியும ் வண்டிக்குள ் இருந்தோம ் அடித்தவர்கள ் போய்விட்டார்கள ் பிறகு அந்த இடத்தில் இருந்தவர்கள் எங்களை வண்டியிலிருந்து இறக்கிவிட்டார்கள் போலிசார் விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரால் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.
அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-

கடந்த 7.8.2009 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு எனது மைத்துனர் கிருஷ்ணன ் என்பவரை தூசி காவல்நிலையத்தில ் கையொப்பமிட்டுவிட்டு அப்துள்ளாபுரம் பேருந்துநிலையம் அருகில் வந்தவரை கிழ்கதிர்பூரை சேர்ந்த சங்கர் மற்றும் பழனியை வழிமடக்கி கத்தியால் தலையில் வெட்டியதாகவும் அவர் அங்கிருந்து தப்பித்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றதாகவும ் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு தனியார் அம்புலென்சு பதிவு எண்.டிஎன்.01ஆர்4115 என்ற வேனில் அவரை ஏற்றிக்கொண்டு அவருடன் நானும் பெருமாள் அலமேலு கோவிந்தராஜ் ஆகியோருடன் சக்திவேல் வேனை ஓட்ட காலை 11.30 மணிக்கு

காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையம் அருகில் எங்கள் ஆம்புலென்சு வேனை மடக்கி குறுக்கே குவாலிஸ் வேனும் ஒரு ஆட்டோவும் வந்து நின்றது என்றும் அதிலிருந்து 20 நபர்கள் இறங்கி வந்து வேனை அடித்து நொறுக்கினார்கள் என்றும் அப்போது கிருஷ்ணனை பார்த்து எங்கள ் அண்ணன ் ஸ்ரீதா ் கிட்ட எவன் வம்பு வைத்தாலும் இதே கதிதான் என்று சொல்லி பாஸ்கா் கருப்பு ஸ்ரீதர் நாராயணன் ஆட்டோ செந்தில் கருப்பு அசேன் தணிகா குமரேசன் ராஜா குதிரை சீனு வெள்ளை குமார் மணி சங்கர் ஆறி வேலு வடிவேலு பழனி சங்கர் ஆகியோர் வேனை அடித்து நொறுக்கிவிட்டு மீண்டும் கிருஷ்ணனை பார்த்து பழனி ராஜா குமரேசன் ஆகியோர் கிருஷ்ணனை வெட்டியபோது கையால் தடுக்க இரண்டு கைகளையும் வெட்டிவிட்டு பின்னர் ஆம்புலென்சில் இருந்து இருக்கையை எடுத்து தடுத்ததாகவும் ஒட்டுநருக்கும் காயம் ஏற்பட்டதாகவும் காயம் பட்ட அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றதாகவும் அங்கிருந்து கிருஷ்ணனை அப்போலோ மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாகவும் கிருஷ்ணனை விசாரிக்க ஸ்ரீதர் என்பவர் சீனு என்பரை உயிருடன் எரித்துவிட்ட தகவல் தெரிந்துவிட்டதால் நான் வெளியே சொல்லிவிடுவேன் என்று பயந்து என்னை கொலை முயற்ச்சி செய்தார் என்று கூறினார் என்றும் அது தொடர்பாக காவல்நிலைய ஆய்வாளார் விசாரிக்க நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), காஞ்சிபுரம் (பக்கம் )
எஸ்.சி. எண்:- **SC.No. 19/2013**
**-----**

**2024-**ம் ஆண்**டு செப்டம்பர் திங்கள் 19 –** ம் நாள் **வியாழன் கிழமை PW** என்பவரின் சாட்சியாகிய **திரு./திருமதி. அலமேலு** நபரின் வாக்குமூலம் **(1876**ம் ஆண்டின் **10** விதியின் படி **) Tr.Ravichandran, Gr.I B.C,**அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | **திரு. அலமேலு** |
| **W/o.** | - | **திரு. எழுமலை** |
| வயது | - | **65** |
| தொழில் | - | **விவசாயம்** |

முதல் விசாரணை

நான் தற்போது புஞ்சைஅரசந்தாங்கல் கிராமத்தில் குடியிருக்கிறேன் விவசாயம் செய்கிறேன். 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனது மருமகன் கிருஷ்ணபிள்ளையை அப்பதுல்லாபுரம் குளம் அருகே வெட்டி விட்டதாகவும் அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாகவும் கேள்விபட்டு நான் காஞ்சிபுரம் மருத்துவமனை சென்றேன். அங்கிருந்து கிருஷ்ணபிள்ளையை சென்னை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் அதில் நானும் சென்றேன். அப்போது அவசர ஊர்த்தி பொன்னேரி கரை அருகே அவசர ஊர்த்தி சென்றபோது ஆட்டோவில் சிலர் வந்து தாக்கினார்கள் நான் வண்டிக்குள் ஒளிந்துகொண்டேன். அரைமணி நேரம் கழித்து வெளியே வந்து பார்த்தபோது கிருஷ்ணபிள்ளையை வெட்டிவிட்டார்கள் அவர் எங்கே போனார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரால் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-

கடந்த 7.8.2009 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு எனது மருமகன் கிருஷ்ணன˙ என்பவரை தூசி காவல்நிலையத்தில˙ கையொப்பமிட்டுவிட்டு அப்துள்ளாபுரம் பேருந்துநிலையம் அருகில் வந்தவரை கிழ்கதிர்பூரை சேர்ந்த சங்கர் மற்றும் பழனியை வழிமடக்கி கத்தியால் தலையில் வெட்டியதாகவும் அவர் அங்கிருந்து தப்பித்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றதாகவும˙ அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு தனியார் அம்புலென்சு பதிவு எண்.டிஎன்.01ஆர்4115 என்ற வேனில் அவரை ஏற்றிக்கொண்டு அவருடன் நானும் பெருமாள் நான் கோவிந்தராஜ் ஆகியோருடன் சக்திவேல் வேனை ஓட்ட காலை 11.30 மணிக்கு காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையம் அருகில் எங்கள் ஆம்புலென்சு வேனை மடக்கி குறுக்கே குவாலிஸ்

வேனும் ஒரு ஆட்டோவும் வந்து நின்றது என்றும் அதிலிருந்து 20 நபர்கள் இறங்கி வந்து வேனை அடித்து நொறுக்கினார்கள் என்றும் அப்போது கிருஷ்ணனை பார்த்து எங்கள் அண்ணன் ஸ்ரீதர் கிட்ட எவன் வம்பு வைத்தாலும் இதே கதிதான் என்று சொல்லி பாஸ்கர் கருப்பு ஸ்ரீதர் நாராயணன் ஆட்டோ செந்தில் கருப்பு அசேன் தணிகா குமரேசன் ராஜா குதிரை சீனு வெள்ளை குமார் மணி சங்கர் ஆி வேலு வடிவேலு பழனி சங்கர் ஆகியோர் வேனை அடித்து நொறுக்கிவிட்டு மீண்டும் கிருஷ்ணனை பார்த்து பழனி ராஜா குமரேசன் ஆகியோர் கிருஷ்ணனை வெட்டியபோது கையால் தடுக்க இரண்டு கைகளையும் வெட்டிவிட்டு பின்னர் ஆம்புலென்சில் இருந்து இருக்கையை எடுத்து தடுத்ததாகவும் ஓட்டுநருக்கும் காயம் ஏற்ப்பட்டதாகவும் காயம் பட்ட அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றதாகவும் அங்கிருந்து கிருஷ்ணனை அப்போலோ மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாகவும் கிருஷ்ணனை விசாரிக்க ஸ்ரீதர் என்பவர் சீனு என்பரை உயிருடன் எரித்துவிட்ட தகவல் தெரிந்துவிட்டதால் நான் வெளியே சொல்லிவிடுவேன் என்று பயந்து என்னை கொலை முயற்ச்சி செய்தார் என்று கூறினார் என்றும் அது தொடர்பாக காவல்நிலைய ஆய்வாளர் விசாரிக்க நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.